**செய்தி வெளியீடு எண் : 2041** **நாள் : 15.11.2022**

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை–106**

**அறிவிக்கைஎம்.டி. (ஓமியோபதி) பட்டமேற்படிப்பு மாணவர் சேர்க்கை 2022–2023ம் கல்வியாண்டு**

தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள இரண்டு சுயநிதி ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளான சாரதாகிருஷ்ணா ஓமியோபதி மருத்துவ கல்லூரி மற்றும் ஒயிட் மெமோரியல் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள எம்.டி.(ஓமியோபதி) மருத்துவப் பட்டமேற்படிப்புகளில் 2022–2023ஆம் கல்வி ஆண்டில் சேருவதற்கான விண்ணப்பங்கள் ஓமியோபதி மருத்துவத்திற்கான AIAPGET–2022–ல் தகுதி பெற்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

1. அரசுஒதுக்கீட்டுஇடங்கள்
2. நிர்வாகஒதுக்கீட்டுஇடங்கள்

விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை (முறையே அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு தனித்தனியாக) www.tnhealth.tn.gov.in – என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பப்படிவங்கள் இயக்குநரக அலுவலகத்திலோ அல்லது தேர்வுக்குழு அலுவலகத்திலோ அல்லது வேறு எந்த இடங்களிலோ வழங்கப்படமாட்டாது. மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கதேவையானதகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள், கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு www.tnhealth.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள தகவல் தொகுப்பேட்டில் அறியலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கோரப்பட்டுள்ள சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்துசெயலாளர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவ ம்மற்றும் ஓமியோபதித் துறை இயக்குநரகம், சென்னை – 600 106 என்ற முகவரிக்கு 25.11.2022 மாலை 5.30 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

| | |
|---|---|
| அறிவிக்கை நாள் | 16.11.2022 |
| விண்ணப்பப்படிவம் பதிவிறக்கம் செய்ய தொடக்க நாள் | 16.11.2022<br>காலை 10.00 மணி |
| விண்ணப்பப்படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் | 25.11.2022<br>பிற்பகல் 05.00 மணிவரை. |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் | 25.11.2022<br>பிற்பகல் 05.30 மணிவரை. |

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in